## சுருக்கம்

நெடுஞ்சாலைத்துறை – நில எடுப்பு – தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்-இராமநாதபுரம் புறவழிச்சாலை அமைக்கும் பணி- இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - கழுகூரணி குருப்மாடக்கொண்டான் கிராமம் - புல எண். 98/4ல் கூடுதலாக கையகப்படுத்தப்பட்ட 1180 சதுர அடி நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகை – திரு. விஜயன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு - மேற்படி நீதிமன்ற தீர்ப்பின்படி உயர் இழப்பீட்டுத் தொகை ரூ.3,81,629/-ஐ இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தல்-நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை

அரசாணை (டி) எண். 255 நாள்: 27.09.2018

விளம்பி, புரட்டாசி 11, திருவள்ளுவராண்டு 2049

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.59, நெடுஞ்சாலைத் (எச்.என்.1) துறை, நாள் 16.03.2001.
2. அரசாணை (நிலை) எண்.40, நெடுஞ்சாலைத் (எச்.எப்.2) துறை, நாள் 25.02.2003.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர் (கூ/பொ), தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் -II அவர்களின் கடித எண். ஆர் 3/1350/2007 நாள் 05.08.2017 மற்றும் தனி மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை அவர்களின் அதே கடித எண். நாள் 11.08.2017.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மற்றும் குடவாசல் வட்டங்களில் மொத்தம் 31 கிராமங்களில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகளை அகலப்படுத்தி புறவழிச்சாலை அமைக்க நில எடுப்பு செய்ய ரூ.49.50 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி திட்டம் செயல்படுத்தப்படும் 11 மாவட்ட ஆட்சியர்கள் நேரடி பேச்சு வார்த்தை மூலம் நிலங்களை கையகப்படுத்தவும், நில எடுப்பு நிலங்களுக்கு நில இழப்பீட்டுத் தொகையாக வழிகாட்டி மதிப்பில் 150/- சதவிகிதத்திற்கு குறையாமல் வழங்கிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/திட்ட இயக்குநர் (கூ/பொ), தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II அவர்கள் தமது அறிக்கையில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் -ின் கீழ், இராமநாதபுரம் புறவழிச்சாலை அமைத்திட, கழுகூரணி குருப் மாடக்கொண்டான் கிராம புல எண்.98/4-ல் உள்ள திரு.விஜயன் என்பவருக்கு சொந்தமான 1483 சதுரஅடி நிலத்தில் 303 சதுர அடி கிரையம் பெற்றதாகவும், மொத்த பரப்பான 1483 சதுரஅடி நிலத்திலும் சாலை அமைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்க கோரி திரு.விஜயன் என்பவரால் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதலேற்பு வழக்கு எண். 110/2012ன் மீது 10.10.2014 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தாவா சொத்தில் உள்ள

தார் சாலையை அகற்றி 2-ஆம் பிரதிவாதியான தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் இராமநாதபுரம் அவர்கள் தாவா சொத்தை வாதிக்கு ஒப்புவிக்கும்படி தீர்ப்பு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரது செயலாணைகள் ந.க. எண் ஆர்.எஸ்.பி/2/74/2007 நாள் 12.12.2007-ன் படி இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம். கழுகூரணி கிராமம் புல எண் 98/4-க்கு நேரடி பேச்சுவார்த்தை மூலம் விலை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றும் பொருட்டு திரு.விஜயன் என்பவரால் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்றல் மனு எண். 24/2015 தாக்கல் செய்யப்பட்டு 12.06.2017 அன்று விசாரணையில் தாவா புலத்தில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையை அகற்றி நிலத்தினை மீள வழங்க வேண்டும் அல்லது கூடுதலாக கையகப்படுத்தப்பட்ட 1180 சதுர அடி நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகையினை வழங்க வேண்டும் என தெரிவித்து இறுதி விசாரணை 10.08.2017-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது என தெரிவித்துள்ளார். மேலும், நிலம் கையகப்படுத்தப்பட்ட இடத்தில் தற்போது மேம்பாலத்துடன் கூடிய சாலை அமைக்கப்பட்டு நீர் ஓடுவதற்கு மடையும் அமைக்கப்பட்டுள்ளதால் திரு.விஜயன் அவர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் நஷ்டஈட்டு தொகையை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யலாம் என்று இராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞர் தமது சட்ட கருத்துரையில் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில், இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட LAOP 110/2014 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுமாறு நிலவுடமையாளர் திரு.விஜயன் என்பவர் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த நிறைவேற்று மனு (Executive Petition) 24/15 தொடர்பாக மீண்டும் வழக்கு 22.08.2017 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது. எனவே, நீதிமன்ற உத்தரவுப்படி திரு.விஜயன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.98/4ல் கூடுதலாக எடுக்கப்பட்ட 1180 சதுர அடி நிலத்தினை திரும்ப ஒப்படைக்கப்பட இயலாத சூழ்நிலையில் உள்ளதால், நீதிமன்ற நடவடிக்கையை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே கூடுதலாக எவ்வித 15(2) & 15(1) அறிவிப்பின்றி மேற்படி மனுதாரரின் நிலத்தில் சாலை அமைக்கப்பட்ட நாளாகிய 22.12.2009-ஐ கணக்கில் கொண்டு கூடுதலாக பயன்படுத்தப்பட்ட1180 சதுர அடி நிலப்பரப்பிற்குரிய இழப்பீடு தற்போதைய நில எடுப்புச் சட்டம் 2013-ன்படி நில உரிமையாளரால் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்றுகை மனு நிலுவையில் உள்ள நிலையில் நிலத்திற்கான சந்தை மதிப்பு சதுர அடிக்கு ரூ.111/-என்ற அடிப்படையில் 1180 சதுர அடிக்கு ரூ.1,30,980/- அத்துடன் தற்போதைய நிலஎடுப்புச்சட்டம் 2013-ன்படி (100 சதவித ஆறுதல் தொகை மற்றும் மேற்படி நிலத்தில் சாலை அமைக்கப்பட்ட நாளான 22.12.2009 முதல் 02.08.2017 வரை வருடத்திற்கு 12 சதவிகித கூடுதல் சந்தை மதிப்பும் சேர்த்து) மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.3,81,629/-ஐ மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ திட்ட இயக்குநர் (கூ.பொ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/ திட்ட இயக்குநர் (கூ/பொ), தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்–II அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்-Iன் கீழ், இராமநாதபுரம் புறவழிச்சாலை அமைத்திட, இராமநாதபுரம் மாவட்டம் (ம) வட்டம், கழுகூரணி குரூப் மாடக்கொண்டான் கிராமத்தில் புல எண்.98/4ல் 1180 சதுர அடி நிலம் கூடுதலாக பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்து, நிலவுடமையாளர் திரு. விஜயன் என்பவரால் தொடரப்பட்ட மு.வ.எண்.110/2012ல் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பாணையின்படி, மேற்படி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய ரூ.3,81,629/-ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்தோராயிரத்து அறுநூற்று இருபத்து ஒன்பது) மட்டும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"5054 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்செலவு – 80 – பொது – 800-ஏனைய செலவு –வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்-- PB –தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - 64 - நிலங்கள் (சாட்டியது)"

**(த.தொ.கு.5054-80-800-PB-6403)**

கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

" K வைப்பீடுகள், முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள், 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் – 104 உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் - AA உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள். (த.தொ.கு.8443-104-AA-000B வரவுகள்")

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையை அரசு கணக்கிலிருந்து பெற்று திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II மூலமாக இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் உடன் வைப்பீடு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. இது குறித்த அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தொகை வைப்பீடு செய்வதற்கு முன் தற்பொழுதுள்ள நடைமுறைகளின்படி பிடித்தம் செய்ய வேண்டியவைகளை பிடித்தம் செய்த பிறகு மீதி இழப்பீட்டுத் தொகையினை வைப்பீடு செய்யுமாறு திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் -II அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு. எண். 44151/PW-I/2018 நாள் 25.09.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1367 (ஆயிரத்து முன்னூற்று அறுபத்தி ஏழு) படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் – II, சென்னை- 28.
மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம்.
மாநில கணக்காயர், சென்னை -9/18. (A&E)/தணிக்கை
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம்.

<u>**நகல்:**</u>

கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை -9.
நிதி (பொ.ப.1) /வரவு செலவு (பொ.II)/வருவாய்/ சட்டத்துறைகள், சென்னை-9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்